மூலமாக ஒதுக்கி சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 124, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

124—

தொழிற்பேட்டை

***53291—திரு. வி. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி, ஜமுனாமரத்தூர் ஒன்றியத்தில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி, ஜமுனாமரத்தூர் ஒன்றியத்தில் தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம் அவர்கள்.

திரு. வி. பன்னீர்செல்வம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 'தமிழ்' மூன்றெழுத்து; 'அண்ணா' மூன்றெழுத்து; 'M.G.R.' மூன்றெழுத்து; 'நட்பு' மூன்றெழுத்து; 'கருணை' மூன்றெழுத்து; 'நன்றி' மூன்றெழுத்து; இவற்றிற்கெல்லாம் வடிவாகத் திகழ்ந்த 'அம்மா' என்னும் அற்புதச் சொல் மூன்றெழுத்து. தாயே, நீங்கள் கண் மூடி உறங்கும் வங்கக் கடலோரம் எங்கள் கண்ணீர்த் துளிகளை காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2020 மார்ச் 18]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அம்மாவின் தமிழகமே, அன்னையின் தேசத்தில் முதலாவது என்று இன்று பெயரெடுத்து தந்திருக்கும் சேலம் தந்த கொடை, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழர் நலன் காத்த விவசாயிகளின் நண்பர், நெசவாளர்களின் தோழன், பாட்டாளிகளின் பங்காளன் என்று அடைமொழிகளை அடுக்கிக்கொண்டே போகலாம். இதற்கும் மேலாக கொரோனா என்கின்ற கொடிய வைரஸை தமிழகத்திற்குள் நுழையவிடாமல் இரும்புக் கரம் கொண்டு தடுத்து நிறுத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு மக்களின் முதல்வராய், அம்மாவின் நல்லாசியோடு, கழகத்தையும், தமிழகத்தையும் வழிநடத்தும் வணக்கத்திற்கும், மரியாதைக்கும் உரிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வாடிவாசல் திறக்காமல், வீட்டு வாசல் போகமாட்டோம் என்ற தமிழர்களின் மானம் காத்த ஜல்லிக்கட்டு நாயகர், எத்தனை ஆண்டுகளானாலும் சேர, சோழ, பாண்டியர்கள் போல உங்கள் பெயரும் தமிழ் சமூகத்தில் நிலைத்து நிற்கும் செயலைச் செய்து, அம்மாவின் ஆசியோடும், கழகத்தை வழிநடத்தி, ஆட்சிக்குத் துணையாக நின்று, அன்போடு எங்களுக்கு வழிகாட்டும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.

கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஜமுனாமரத்தூர் ஒன்றியத்தில் வசிக்கின்ற மக்கள் அனைவரும் மலைவாழ் மற்றும் பழங்குடியின மக்கள். இந்தப் பகுதியில் ஆயிரக்கணக்கான படித்த வேலைவாய்ப்பற்ற மலைவாழ் மற்றும் பழங்குடியின இளைஞர்கள் இருக்கின்றனர். அவர்கள் சில சமூக விரோத செயல்களுக்காக இடைத்தரகர்கள்மூலம் அண்டை மாநிலங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, துப்பாக்கி சூட்டுக்கு பலியாகின்ற நிலைமை இருக்கின்றது. அந்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தால், அவர்கள் அங்கு செல்வதைத் தடுக்க முடியும். ஆகவே, மலைவாழ் மற்றும் பழங்குடியின இளைஞர்களின் நலனைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஜமுனாமரத்தூர் ஒன்றியத்தில் சிட்கோ தொழிற்பேட்டை ஒன்றை அமைத்துத் தருவாரா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

[2020 மார்ச் 18

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி, ஜமுனாமரத்தூர் ஒன்றியத்தில் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்க திருவண்ணாமலை மாவட்ட நிருவாகத்துடன் சிட்கோ நிறுவனத்தால் கலந்தாலோசிக்கப்பட்டது. மாவட்ட நிருவாகம், இப்பகுதி பெரும்பாலும் மலைப்பாங்கான பகுதிகளை உள்ளடக்கியதாக இருப்பதால், ஜமுனாமரத்தூர் ஒன்றியத்தில் தொழிற்பேட்டை அமைக்கத் தேவையான 15 முதல் 30 ஏக்கர் வரையிலான அரசு புறம்போக்கு இடங்கள் ஏதுமில்லையென தெரிவித்துள்ளது. எனவே, ஜமுனாமரத்தூர் ஒன்றியத்தில் உகந்த நிலம் கிடைக்கப்பெறாததால் அங்கே சிட்கோ தொழிற்பேட்டை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை. இருப்பினும், கலசப்பாக்கம் தொகுதி, செங்கம் வட்டத்திற்குட்பட்ட காரப்பட்டு மற்றும் வாழ்விடந்தாங்கல் கிராமங்களில் புதிய தொழிற்பேட்டை அமைப்பது குறித்து கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அவற்றில் புதுப்பாளையம் ஒன்றியம், காரப்பட்டு கிராமத்தில் இரண்டு வெவ்வேறு இடங்களில் முறையே புல எண் 454/2–ல், 3.12 ஹெக்டேர் நிலமும், புல எண் 1027/1–ல், 3.24.0 ஹெக்டேர் நிலமுமாக மொத்தம் 6.36 ஹெக்டேர் என, மிகக் குறைந்த பரப்பளவு கொண்ட, தீர்வை ஏற்படாத தரிசு நிலங்கள் மட்டுமே உள்ளதென மாவட்ட நிருவாகம்மூலம் தெரிய வந்துள்ளதால், இங்கே தொழிற்பேட்டை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும், வாழ்விடந்தாங்கல் கிராமத்தில், சர்வே எண் 52–ல், 6.50 ஹெக்டேர் தீர்வை ஏற்படாத தரிசுக் காட்டு நிலம் கண்டறியப்பட்டது. மேற்படி நிலத்தில் பொது மக்கள் பயன்பாட்டிற்காக குடிநீர்த் தொட்டி ஒன்றும், சிறிய குன்று ஒன்றும் இப்பகுதியில் அமைந்துள்ளது. மேற்படி இடத்தில் கனரக வாகனங்கள் செல்லத்தக்க வவகையில், சாலை வசதிகளை ஏற்படுத்தித் தர சாத்தியக்கூறுகள் இல்லாததால், அங்கு தொழிற்பேட்டை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம் அவர்கள்.

திரு. வி. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கலசப்பாக்கம் தொகுதி, முழுக்க, முழுக்க

2020 மார்ச் 18]

விவசாயம் சார்ந்த தொகுதியாகும். இங்கு ஆயிரக்கணக்கான இளைஞர்கள் படித்து, வேலைவாய்ப்புக்காக சென்னை, பெங்களூரு, கோயம்புத்தூர், திருப்பூர் போன்ற பகுதிகளுக்குச் செல்கின்றனர். கலசப்பாக்கம் வட்டம், தென்மாதிமங்கலம் கிராமம், பர்வதமலை அடிவாரத்தில் அரசுக்குச் சொந்தமான சுமார் 15 ஏக்கர் நிலம் உள்ளது. ஆகவே, அவர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் அந்த இடத்தில் தொழிற்பேட்டை அமைத்துத் தர முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பா. பெஞ்ஜமின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கக்கூடிய பகுதியில் புதிய தொழிற்பேட்டை அமைப்பதற்கு சாத்தியக்கூறு இருப்பின், போதுமான நிதி ஆதாரங்களுடனும், தொழில் திட்டங்களுடனும், தொழில் தொடங்க ஆர்வமுள்ள 20 தொழில் முனைவோர்கள் முன்வரும் நிலையில், அந்தப் பகுதியில் உள்ள அரசு புறம்போக்கு நிலங்களின் விவரம், தொழில் முனைவோர்களின் தேவை போன்றவற்றின் அடிப்படையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 125, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே.பொ. சிவசுப்பிரமணி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

125—

தொழிற்பயிற்சி நிலையம்

***47325—திரு. வே.பொ. சிவசுப்பிரமணி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, சிவகிரி பகுதியில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?